முட்டுக்காடு படகு குழாமில்

மிதக்கும் உணவக கப்பல் கட்டுமானப் பணி

● சுற்றுலாத் துறை அமைச்சர் ராமச்சந்திரன் ஆய்வு

● முட்டுக்காடு

சென்னையை அடுத்த முட்டுக்காடு படகுக் குழாமில் மிதக்கும் உணவக கப்பல் கட்டுமானப் பணியை சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆய்வு செய்தார்.

சென்னையை அடுத்துள்ள முட்டுக்காட்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்துக்கு சொந்தமான படகு குழாம் உள்ளது. இந்த படகு குழாமில் தனியார் பங்களிப்புடன் ரூ. 5 கோடி மதிப்பீட்டில் 125 அடி நீளம், 25 அடி அகலத்தில் பிரம்மாண்டமான உணவகத்துடன் கூடிய இரண்டு அடுக்கு மிதக்கும் கப்பல் விடப்பட உள்ளது. இதற்கான கட்டுமானப் பணி கடந்த மார்ச் மாதம் தொடங்கியது. இந்த மிதக்கும் கப்பல் கட்டுமானப் பணியை தமிழ்நாடு சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேற்று ஆய்வு செய்தார். கப்பல் கட்டுமானப் பணியில் ஈடுபட்டுள்ள கொச்சி நிறுவன அதிகாரிகள், ஊழியர்களிடம் பேசிய அமைச்சர், வரும் ஆகஸ்ட் மாத இறுதிக்குள் பணிகளை முடித்து தருமாறு அவர்களைக் கேட்டுக் கொண்டார். இதைத் தொடர்ந்து முட்டுக்காடு படகு குழாமை ஆய்வு செய்த அமைச்சர் படகில் அதிகாரிகளுடன் பயணம் செய்தார்.

↑ சென்னை முட்டுக்காட்டில் கப்பல் கட்டும் பணியை ஆய்வு மேற்கொண்ட அமைச்சர் ராமச்சந்திரன். உடன் சுற்றுலா வளர்ச்சிக் கழக பொது மேலாளர் பாரதி தேவி, திருப்போரூர் ஒன்றியக் குழுத் தலைவர் எல்.இதயவர்மன், முட்டுக்காடு ஊராட்சி மன்றத் தலைவர் சங்கீதா மயில்வாகனன் உள்ளிட்டோர்.

மேலும், சுற்றுலாப் பயணிகளுக்காக அமைக்கப்பட்டுள்ள உணவகம், கழிப்பறை, ஓய்வறை ஆகியவற்றையும் ஆய்வு செய்த அமைச்சர் அனைத்தையும் தரமான சுகாதாரத்துடன் பராமரிக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். மேலும், படகுகளில் பயணிக்கும் அனைவரும் கட்டாயமாக லைப் ஜாக்கட் அணிய வைக்க வேண்டும் என்றும், அவர்களின் பாதுகாப்பு தான் மிகவும் முக்கியம் என்றும் அவர் படகு ஊழியர்களிடம் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது நிகழ்ச்சியில் சுற்றுலா வளர்ச்சிக் கழக பொது மேலாளர் பாரதி தேவி, திருப்போரூர் ஒன்றியக் குழுத் தலைவர் எல்.இதயவர்மன், முட்டுக்காடு ஊராட்சி மன்றத் தலைவர் சங்கீதா மயில்வாகனன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

அமைச்சர் ராமச்சந்திரன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழ்நாட்டிலேயே முதன்முறையாக இந்த மிதவை கப்பல் முட்டுக்காட்டில் செயல்படுத்தப்பட உள்ளது. இந்த கப்பல் ரூ.5 கோடி மதிப்பீட்டில் 125 அடி நீளம், 25 அடி அகலத்தில் வடிவமைக்கப்படுகிறது. இந்த கப்பலில் தரைத் தளம் முழுவதும் ஏ.சி. வசதி செய்யப்பட்டிருக்கும். முதல் தளம் திறந்த வெளி உணவகமாக செயல்படும். இங்கு இருக்கும் வரவேற்பை பொறுத்து தமிழ்நாட்டில் வாய்ப்புள்ள 4 இடங்களிலும் செயல்படுத்த எண்ணி உள்ளோம் என்றார்.

↑ தாம்பரம் மாநகர காவல் ஆணையரகம் சார்பில் தயாரிக்கப்பட்ட போதை விழிப்புணர்வு குறும்படத்தை நேற்று தாம்பரம் மாநகர காவல் ஆணையர் அ. அமல்ராஜ் வெளியிட்டார்.

தாம்பரம் மாநகர காவல் ஆணையரகம் சார்பில்

போதை விழிப்புணர்வு குறும்படம் வெளியீடு

● தாம்பரம்

தாம்பரம் மாநகர காவல் ஆணையரகம் சார்பில் பொது மக்களுக்கு கஞ்சா, மதுபானம் மற்றும் புகையிலை போன்ற போதை பொருட்களை பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவுகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் குறும்படம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த குறும்படத்தின் வெளியீட்டு விழா நேற்று சோழிங்கநல்லூரில் உள்ள தாம்பரம் மாநகர் காவல் ஆணையரக அலுவலகத்தில் நடந்தது. விழாவில் ஆணையர் முனைவர் அ. அமல்ராஜ் கலந்து கொண்டு போதை பழக்கத்துக்கு எதிரான குறும்படத்தை வெளியிட்டார்.

காவல்துறை நடவடிக்கை

போதைப் பழக்கத்தில் சிக்கிக் கொள்வோரை மீட்க, அரசும், காவல்துறையும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. அதில், ஒரு முயற்சியாக போதைப் பொருள் பயன்பாட்டின் கெடுதல்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக, இந்த குறும்படத்தை உருவாக்கி உள்ளனர்.

கிரியாஸ் என்ற தனியார் வீட்டு உபயோக பொருட்களை விற்பனை செய்யும் நிறுவனத்தோடு இணைந்து, தாம்பரம் மாநகர காவல்துறையினர், பொதுமக்கள் நலன் கருதி இந்த குறும்படத்தை வெளியிட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

காஞ்சி, செங்கை, திருவள்ளூர் மாவட்டங்களில்

திட்டக் குழுவின் முதல் கூட்டம்

● காஞ்சி/செங்கை/திருவள்ளூர்

காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்களில் திட்டக் குழு தேர்தல் நடைபெற்று அதன் உறுப்பினர்கள் பொறுப்பேற்ற பின்னர் அந்தக் குழுவுக்கான முதல் கூட்டம் நேற்று நடைபெற்றது.

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற முதல் கூட்டத்தை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் பங்கேற்று தொடங்கி வைத்தார். இந்தக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் கலைச்செல்வி, மக்களவை உறுப்பினர் க.செல்வம், சட்டப்பேரவை உறுப்பினர்கள் சுந்தர், எழிலரசன், செல்வப்பெருந்தகை, மாவட்ட வருவாய் அலுவலர் வெங்கடேஷ் உட்பட பலர் பங்கேற்றனர்.

இதேபோல் திருவள்ளூர் மாவட்டத்திலும் மாவட்ட திட்டக் குழு முதல் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். இந்தக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் ஆல்பிஜான் வர்கீஸ், அரக்கோணம் மக்களவை உறுப்பினர் ஜெகத்ரட்சகன் உட்பட பலர் பங்கேற்றனர்.

செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட திட்டக்குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆ.ர.ராகுல் நாத் தலைமையில் நடைபெற்றது. உடன் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் இந்துபாலா, மகளிர் திட்ட இயக்குநர் திரு.மணி, எம்.எல்.ஏ, உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பலர் உள்ளனர். முன்னதாக திட்ட குழுவுக்கு தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்கள் பதிவு ஏற்றுக் கொண்டனர்.

மாவட்ட திட்டக்குழு என்பது மாவட்டத்தில் உள்ள ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மூலம் தயாரிக்கப்படும் சமுதாய பொருளாதார வளர்ச்சி திட்டங்கள், மாவட்ட அளவில் செயல்படுத்தப்படும் துறை வாரியான வளர்ச்சி திட்டங்கள், மற்றும் வங்கி கடன் திட்டங்கள் ஆகியவற்றை தொகுத்து ஒருங்கிணைந்த மாவட்ட வளர்ச்சித் திட்டம் தயாரித்து செயல்படுத்தக் கூடிய அமைப்பாகும். முதல் கூட்டத்தில் குழுவின் அதிகாரம் குறித்து விளக்கப்பட்டது.

↑ தமிழ்நாடு பிராமணர் சங்கத்தின் பம்மல் கிளை சார்பில், 21 சிறுவர்களுக்கு, சமஷ்டி உபநயன விழா குரோம்பேட்டையில் நேற்று நடைபெற்றது.

vasalam.s@hindutamil.co.in

தாம்பிராஸ் சார்பில் குரோம்பேட்டையில்

21 சிறுவர்களுக்கு சமஷ்டி உபநயன விழா

● குரோம்பேட்டை

தமிழ்நாடு பிராமணர் சங்கத்தின் பம்மல் கிளை சார்பில், 21 சிறுவர்களுக்கு, சமஷ்டி உபநயன விழா குரோம்பேட்டையில் நடைபெற்றது.

சென்னை, தாம்பிராஸ் எனப்படும் தமிழ்நாடு பிராமணர் சங்கத்தின் பல்வேறு கிளைகள் சார்பில், 'சமஷ்டி உபநயன பிரம்மோபதேசம்' விழா நடத்தப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக, பல்லாவரம் அருகே பம்மல் கிளை சார்பில் குரோம்பேட்டை ராதா நகரில் 31-வது ஆண்டு சமஷ்டி உபநயனம் நடந்தது. இதை முன்னிட்டு, நேற்று காலை உதகசாந்தி நிகழ்ச்சி நடந்தது. அதைத் தொடர்ந்து, 21 சிறார்களுக்கு பூணூல் அணிவித்து, பிரம்மோபதேசமும் நடந்தது.

உபநயனமான அனைவருக்கும் சந்தியா வந்தன நூல், ருத்திராக்ஷம், பிரசாதம் வழங்கப்பட்டது. நிறைவாக பாலிகை கரைத்தல் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதுகுறித்து, சங்க நிர்வாகிகள் கூறியதாவது: பூணூல் அணிந்தவர் பெற்றோருக்கும், இந்து மதத்துக்கும் கட்டுப்பட வேண்டும். கடமைகளை தவறாமல் செய்ய வேண்டும். நேர்மையாக, ஒழுக்கத்துடன் வாழவேண்டும். இதற்காகத்தான் இந்த சம்பிரதாயத்தை பிராமணர்கள் காலங்காலமாக கடைபிடித்து வருகின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில், பல்லாவரம் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் ப. தன்சிங், முன்னாள் தலைவர் பம்மல் ராமகிருஷ்ணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

குருவிக்காரர் இன மக்களுக்கு சாதிச் சான்றிதழ் வழங்கல்

● காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக மக்கள் நல்லுறவு மைய கூட்டரங்கில் பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர் பங்கேற்று தா.மோ.அன்பரசன் பேசியது: நரிக்குறவர் இன மக்களுக்கு பழங்குடியினர் சான்றிதழ் வழங்க வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்டன. இதன் அடிப்படையில் காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் கோட்டத்துக்கு உட்பட்ட நெமிலி கிராமம் காரந்தாங்கல் பகுதியில் வசித்து வரும் 46 குடும்பங்களுக்கு சிறப்பு முகாம் நடத்தப்பட்டு விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இதேபோல் 96 நபர்கள் இணையவழியில் விண்ணப்பித்தனர். ஏற்கெனவே விண்ணப்பித்தவர்கள் உட்பட 154 பேருக்கு பழங்குடியினர் சான்று வழங்கப்பட்டது. மேலும் 70 பேருக்கு நலவாரிய அட்டை வழங்கப்பட்டது. மொத்தம் 224 பயனாளிகள் பயனடைய உள்ளனர்.

இந்த நிகழ்ச்சியில் ஆட்சியர் கலைச்செல்வி, எம்.பி. செல்வம் உட்பட பலர் பங்கேற்றனர்.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரதம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் குழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

வரி விளம்பரங்கள்

சுய செய்தி

பெயர்மாற்றம்

I, Sharmishtha Das D/o Sanjay Kumar Das R/o C405, Isha Gayatri, Kolapakkam , Chennai, 600128 have changed my name to Nathasha Das for all purposes.

பொது

பொது அறிவிப்பு

படிவ எண் INC-26
[நிறுவன (இணைப்பு) விதிகள் 2014, விதி 30-இன் கீழ்]
மத்திய அரசு முன்னிலையில்
மண்டல இயக்குநர், தென் மண்டலம், 5ஆவது தளம், சாஸ்திரி பவன், 26, ஹாடோஸ் சாலை, சென்னை- 600006, தமிழ்நாடு.
நிறுவனச் சட்டம் 2013, பிரிவு 13, உட்பிரிவு (4) மற்றும் நிறுவன (இணைப்பு) விதிகள் 2014, விதி 30, உட்பிரிவு (5), உட்கூறு (a) தொடர்பாக
மேலும்
M/s.R-செக்கியூர்டு பைனான்ஸ் & கேப்பிட்டல் பிரைவேட் லிமிட்டெட் தொடர்பானது,
பதிவு அலுவலகம்: கதவு எண்: புதிய 5D (பழைய எண் 4D) ராஜாராம் திரைப்பட இயக்குநர் காலனி NA கோடம்பாக்கம் சென்னை தமிழ்நாடு 600024 இந்தியா
.....விண்ணப்பதார நிறுவனம்
இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிப்பது யாதெனில், குறிப்பிட்ட விண்ணப்பதார நிறுவனம் 19.06.2023, திங்கட்கிழமை அன்று நடைபெற்ற சிறப்புப் பொதுக்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சிறப்புத் தீர்மானத்தின்படி பதிவு அலுவலகத்தைத் "தமிழ்நாடு" மாநிலத்திலிருந்து "தெலுங்கானா" மாநிலத்துக்கு மாற்றுவதற்கு மேற்படி நிறுவனத்தின் நிறுவனப் பதிவுக்குறிப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள மாறுதலை உறுதிப்படுத்த நிறுவனச் சட்டம் 2013, பிரிவு 13-இன் கீழ் மத்திய அரசிடம் விண்ணப்பிக்கத் திட்டமிட்டுள்ளது.
நிறுவனத்தின் இந்த மாற்றம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்க விடுப்பம் உள்ளவர்கள் முதலீட்டாளர் புகார்ப் படிவத்தை MCA இணைய முகப்பில் (www.mca.gov.in) பதிவு செய்வதன் வாயிலாக அதைத் தெரிவிக்கலாம் அல்லது எந்த அடிப்படையில் ஆட்சேபிக்கிறார்கள் என்பதை விளக்கும் உறுதிமொழிக் கடிதத்துடன் கூடிய ஆட்சேபணைகள் மற்றும் ஆட்சேபணைக்கான காரணங்கள் ஆகியவற்றை 5வது தளம், சாஸ்திரி பவன், 26, ஹாடோஸ் சாலை, சென்னை-600006, தமிழ்நாடு எனும் முகவரியில் உள்ள மண்டல இயக்குநருக்கு இந்த அறிவிப்பு வெளியாகும் நாளிலிருந்து 14 நாட்களுக்குள் சேர்ப்பிக்கலாம் அல்லது பதிவு அஞ்சலில் அனுப்பி வைக்கலாம். அதன் நகலை விண்ணப்பதார நிறுவனத்துடைய கீழ்க்காணும் பதிவு அலுவலக முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
R-செக்கியூர்டு பைனான்ஸ் & கேப்பிட்டல் பிரைவேட் லிமிட்டெட்
பதிவு அலுவலகம்: கதவு எண்: புதிய 5D (பழைய எண் 4D) ராஜாராம் திரைப்பட இயக்குநர் காலனி NA கோடம்பாக்கம் சென்னை தமிழ்நாடு 600024 இந்தியா
விண்ணப்பதார நிறுவனத்துக்காகவும் அதன் சார்பிலும்
பிரதாப் ரெட்டி
நாள்: 29.06.2023 (இயக்குநர்)
இடம்: தமிழ்நாடு. DIN: 02930897

விளையாட்டு திடல் அமைக்கும் திட்டம் தொடர்பாக

கடும்பாடியில் நகராட்சி நிர்வாக செயலாளர் ஆய்வு

● மாமல்லபுரம்

மாமல்லபுரத்தை அடுத்த கடும்பாடியில் விளையாட்டு திடல் அமைப்பதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ள 59 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலத்தை, நகராட்சி நிர்வாக முதன்மை செயலாளர் சிவ்தாஸ் மீனா நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்தை அடுத்த கடும்பாடி கிராமத்தில் ஈசிஆர் சாலையொட்டி, தமிழக அரசு சார்பில் விளையாட்டு திடல் அமைப்பதற்காக சுமார் 59 ஏக்கர் பரப்பளவுக் கொண்ட தரிசு நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலத்தில், விளையாட்டு திடல் அமைக்கும் பணிகளை மேற்கொள்வது தொடர்பாக நகராட்சி நிர்வாக முதன்மை செயலாளர் சிவ்தாஸ் மீனா நேரில் பார்வையிட்டு நேற்று ஆய்வு செய்தார். அப்போது, மாவட்ட ஆட்சியர் ஆ.ர.ராகுல்நாத் நிலங்கள் குறித்தும், அப்பகுதியில் உள்ள பல்வேறு வசதிகள் குறித்தும் விளக்கினார். மேலும், விளையாட்டு திடல் அமைந்தால் அப்பகுதியில் ஏற்படுத்த வேண்டிய சாலை வசதிகள் உட்பட பல்வேறு கட்டமைப்பு வசதிகள் குறித்து அதிகாரிகளிடம் முதன்மை செயலாளர் கேட்டறிந்தார். இந்த ஆய்வின்போது, பல்வேறு அரசுத் துறை அதிகாரிகள் உடனிருந்தனர்.

↑ திருவள்ளூர் வீரராகவ பெருமாள் கோயிலில் இடிதாக்கிய ஸ்ரீராமர் சந்நிதி கோபுரம் புதுபிக்கப்பட்டு, நேற்று மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தனர்.

மாமல்லபுரம், திருவள்ளூரில் சாகர் கவாச் ஒத்திகை

● மாமல்லபுரம்/திருவள்ளூர்

கடலோர பாதுகாப்பு குழும போலீஸார், உள்ளூர் சட்டம் - ஒழுங்கு போலீஸார் இணைந்து சாகர் கவாச் என்னும் கடல் பாதுகாப்பு ஒத்திகையை ஜூன் 29, 30-ம் தேதிகளில் நடத்துகின்றனர். செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள கடலோர கிராமப் பகுதிகளில் கடலோர பாதுகாப்பு குழும போலீஸார் கடல், கடற்கரையில் தீவிர ரோந்து மற்றும் சோதனைகளில் ஈடுபட்டனர்.

திருவள்ளூரில் நடைபெற்ற ஒத்திகையில், காட்டுப்பள்ளி அதானி துறைமுகத்தில் நுழைய முற்பட்ட, தீவிரவாதிகளை போல வேடமிட்டு வந்த கடலோர காவல்படையை சேர்ந்த 8 பேரை நுண்ணறிவு பிரிவு தகவல் அடிப்படையில், கடலோர காவல்படை உதவி ஆய்வாளர் சபாபதியின் குழுவினர், கடல் பகுதியில் பிடித்தனர். அவர்களை அதானி துறைமுக கடற்கரை பகுதிக்கு அழைத்து விசாரணையில் ஈடுபட்டனர்.

StartupTN

Tamil Nadu Startup and Innovation Mission,
O/o Entrepreneurship Development and Innovation Institute,
Parthasarathy Koil Street, Hindustan Teleprinters Staff Quarters, SIDCO Industrial Estate, Guindy, Chennai, Tamil Nadu 600032

e-Procurement Short Tender Notice

StartupTN invites digitally signed tender through the e-procurement portal from reputed, experienced, financially sound, eligible applicants, who fulfill the qualification criteria as mentioned in the tender under Single Stage Two Envelope (Technical & Financial bid) system for the works as detailed below:
"Request for Proposal (RfP) for selection of Event Management Partner to support StartupTN in organising small & large scale events"
For further details, please visit
For NIT: **www.startuptn.in**
For downloading Bid Documents: **https://tntenders.gov.in/nicgep/app**
EMD Amount: Rs. 2,00,000/-
Tender document can be downloaded from 1.00 PM on 01.07.2023
Bid Due Date (BDD) & time for submission of bids: 15-July-2023 (1.00 PM)
DIPR/3338/Tender/2023 **MD & CEO, StartupTN**
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்."

MALANKARA CREDIT SOCIETY LTD
REGD. OFFICE: 4TH FLOOR, WEST FORT TOWER, WEST FORT JN., THRISSUR, KERALA-680004
REG. NO. MBC/CR/291/2008
MALANKARA MULTI STATE CO-OPERATIVE CREDIT SOCIETY LIMITED
Registered Under
MINISTRY OF CO-OPERATION, GOVT. OF INDIA
www.mmsccs.com • info@mmsccs.com • Toll-free: 1800 313 1223

அறிவிப்பு

Malankara Multistate Cooperative Credit Society Limited-ன் 15 ஆம் ஆண்டு பொதுக்குழு கூட்டம் 2023 ஜூலை 15 சனிக்கிழமை காலை 10.30 மணியளவில், திருச்சூர், கேரளா - 680 004, கிழக்கு கோட்டை, RC பிஷ்ஷப் ஹவுஸ் சாலை, DBCL சென்டரில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

நிகழ்ச்சி நிரல்கள் : (1) பிரார்த்தனை, (2) வரவேற்புரை (3) தலைவர் நிர்வாக இயக்குநர் பேச்சு, 4) நிதி ஆண்டு வருமானம் மற்றும் செலவு புள்ளி விவரங்களை வழங்குதல், (5) இலாப பங்கின் விநியோகம், (6) 2022-23ஆம் ஆண்டிற்கான சட்டப்பூர்வ தணிக்கையாளர்களை நியமிப்பது மற்றும் சம்பள திருத்தம் குறித்து முடிவு செய்தல், (7) Bye-laws-ன் திருத்தங்கள், (8) கடன் கொள்கைகள், வைப்பு மற்றும் பிற பாலிசிகளின் ஒப்புதல், (9) தலைவரின் அனுமதியுடன் மற்ற விஷயங்கள் முடிவு செய்தல், (10) கேள்வி மற்றும் பதில் நேரம், (11) நன்றி அறிவிப்பு.

அனைத்து உறுப்பினர்களுக்கும் 2023-ன் ஆண்டு அறிக்கை வழங்கப்படுகிறது மற்றும் தகுதியுடைய அனைத்து உறுப்பினர்களும் ஆண்டுப் பொது கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு இதன் மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இடம் : திருச்சூர்
நாள் : 15.06.2023

By the Order of Board of Directors
Sd/- Jisso Baby, Chairman

சுந்தரம்-கிளேட்டன் லிமிடெட்

பதிவு அலுவலகம் : "சைதன்யா", எண்.12, காதர் நவாஸ் கான் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை 600 006
இணையதளம் : www.sundaram-clayton.com; **தொலைபேசி :** (044) 28332115, **தொலைநகல் :** (044) 28332113
மின்னஞ்சல் : corpsec@sundaramclayton.com; **CIN :** L35999TN1962PLC004792

61வது ஆண்டு பொதுக்கூட்டம் மற்றும் மின்னணு வாக்குப்பதிவு பற்றிய அறிவிப்பு

கம்பெனி விவகாரங்கள் அமைச்சகம் மற்றும் செபியினால் அவ்வப்போது வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) விதிகள் 2015, அதன்கீழ் உள்ள விதிகள் மற்றும் கம்பெனிகள் சட்டம் 2013-ல் பொருந்தக்கூடிய விதிகளின்படி ஒரு பொதுவான இடத்தில் உறுப்பினர்கள் ஆஜர் ஆகாமல் காணொளி காட்சி ("VC") மற்றும் இதர அங்கீகரிக்கப்பட்ட ஒலி / காட்சி சார்ந்த வழிமுறைகள் ("OAVM") மூலமாக கம்பெனியின் 61-வது வருடாந்திர பொதுக்கூட்டம் **செவ்வாய்க்கிழமை, ஜூலை 25, 2023, அன்று மாலை 3.00 மணிக்கு (இந்திய நேரப்படி)** பொதுக்கூட்டம் பற்றிய மே 5, 2023 தேதியிட்ட அறிவிப்பில் உள்ள தீர்மானங்களை நிறைவேற்ற நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

இந்த ஆவணங்கள் நிறுவனத்தின் இணையதளம் (www.sundaram-clayton.com) பிஎஸ்இ லிமிடெட் (www.bseindia.com) மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்சேஞ்ச் ஆப் இந்தியா லிமிடெட் (www.nseindia.com) இணையதளத்திலும் நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட் (NSDL) (தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு வசதிக்காக அங்கீகரிக்கப்பட்ட முகவர்) இணையதளத்திலும் (www.evoting.nsdl.com) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. மேற்குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கைகளுக்கு இணங்க, நிறுவனத்திடமோ / டெபாசிட்டரிகளிடமோ தங்கள் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்த அனைத்து பங்குதாரர்களுக்கும் பொதுக்கூட்டம் பற்றிய அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை 2022-23 மின்னஞ்சல் மூலம் ஜூன் 29, 2023 அன்று அனுப்பப்பட்டுள்ளது.

வரையறுக்கப்பட்ட நாளான செவ்வாய்க்கிழமை ஜூலை 18, 2023 அன்று காகித வடிவில் / டீமேட் முறையில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் 61-வது ஆண்டு பொதுக்கூட்டம் பற்றிய அறிவிப்பில் உள்ள சாதாரண மற்றும் சிறப்பு வர்த்தகங்கள் குறித்தான தீர்மானங்களுக்கு மின்னணு முறையில் அல்லது NSDL (தொலைதூர மின்னணு வாக்களிப்பு) மூலம் தங்கள் வாக்கை பதிவு செய்யலாம்.

அனைத்து அங்கத்தினர்களுக்கும் இதன் மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால்;

1. ஆண்டு பொதுக்கூட்ட அறிவிப்பின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய சாதாரண மற்றும் சிறப்பு வர்த்தகங்கள் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு அல்லது மின்னணு வாக்குப்பதிவு மூலம் செயலாக்கப்படும்.
2. தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு ஆரம்பிக்கும் நாள் மற்றும் நேரம்: சனிக்கிழமை, ஜூலை 22, 2023 காலை 9 மணி (இந்திய நேரப்படி).
3. தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு முடிவடையும் நாள் மற்றும் நேரம்: திங்கட்கிழமை, ஜூலை 24, 2023 மாலை 5 மணி (இந்திய நேரப்படி).
4. தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு திங்கட்கிழமை, ஜூலை 24, 2023 மாலை 5 மணிக்கு (இந்திய நேரப்படி) மேல் அனுமதிக்கப்பட மாட்டாது.
5. மேலே குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்திற்குப்பின் தொலைவில் இருந்து வாக்களிக்க இயலாது. அங்கத்தினர்கள் தீர்மானத்தின் மீது ஒருமுறை வாக்களித்தப்பின் பின்னர் அதை மாற்ற முடியாது.
6. தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மூலமாக அல்லது ஆண்டு பொதுக்கூட்டத்தில் மின்னணு மூலமாக வாக்களிக்கும் வாக்காளர் பட்டியல் ஜூலை 18, 2023 அன்று வரையறுக்கப்படும்.
7. எந்த ஒரு நபரும் அறிவிப்பு அனுப்பப்பட்டபின் வரையறுக்கப்பட்ட தேதிக்கு முன் கம்பெனியின் பங்குகளை வாங்கி உறுப்பினரானால், evoting@nsdl.co.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது corpserv@integratedindia.in / srirams@integratedindia.inல் விண்ணப்பம் செய்து உள்நுழைய அடையாளச் சொல் (login ID) மற்றும் கடவுச்சொல் (Password) ஆகியவற்றை கேட்டுப் பெறலாம். இருப்பினும் அவர்கள் NSDLல் தொலைவில் இருந்து வாக்களிக்க ஏற்கனவே பதிவு செய்து இருந்தால், அவர்கள் தங்கள் தற்போதைய அடையாளச் சொல் மற்றும் கடவுச்சொல்லை பயன்படுத்தி வாக்களிக்கலாம்.
8. தொலைவில் இருந்து மின்னணு முறையில் வாக்களிக்க இயலாத அங்கத்தினர்கள் மின்னணு மூலமாக ஆண்டு பொதுக்கூட்டத்தில் வாக்களிக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன.
9. தொலைவில் இருந்து மின்னணு முறையில் வாக்களித்த அங்கத்தினர்கள் ஆண்டு பொதுக்கூட்டத்தில் பங்கு பெறலாம் ஆனால் அவர்கள் மறுபடியும் வாக்களிக்க முடியாது.
10. வரையறுக்கப்பட்ட நாளன்று உறுப்பினர் பதிவேடு அல்லது பயனாளிகள் பதிவேட்டில் உள்ள அங்கத்தினர்கள் மட்டுமே தொலைவில் இருந்து மின்னணு முறையில் அல்லது ஆண்டு பொதுக்கூட்டத்தில் மின்னணு முறையில் வாக்களிக்க முடியும்.
11. M/s. B. சந்திரா & அசோசியேட்ஸ், தொழில் முறை கம்பெனி செயலாளர் அவர்களை மின்னணு வாக்குப்பதிவு மற்றும் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் வாக்குப்பதிவு ஆகியவை நேர்மையான மற்றும் ஒளிவுமறைவு இல்லாத முறையில் நடைபெற ஆய்வாளராக கம்பெனியால் நியமிக்கப்பட்டுள்ளார்.
12. வாக்களிக்கும் முறையில் ஏதேனும் சந்தேகமிருந்தால், உறுப்பினர்களுக்கான அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் பகுதி அல்லது தொலைவில் இருந்து வாக்களிக்கும் முறை பற்றிய சிறு குறிப்பேடு ஆகிய பகுதிகளை www.evoting.nsdl.com என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து தெரிந்து கொள்ளலாம் அல்லது 1800-1020-990 மற்றும் 1800-2244